Registrar of News Paper for India Regn. No. 15261/2005 (R.Dis no.1834/04) Date of Publication : 1st Week of Every Month 8 Pages 

CVPA NEWS

A Monthly Newspaper (Tamil & English) for Video & Photographic Professionals

### அறிவிப்பு

நமது சங்கத்தின் மாத இதழான CVPA NEWS ன் PDF File மாதத்தின் இறுதி வாரத்தில் அதாவது 25 ஆம் தேதி முதல் 30 ஆம் தேதிக்குள் சங்க உறுப்பினர்களின் மொபைல் போனுக்கு நேரடியாக அனுப்பி வைக்கப்படும்.

இப்படிக்கு
**நியூஸ் ஆசிரியர்**

AN OFFICIAL NEWS MAGAZINE FROM CHENNAI VIDEO & PHOTOGRAPHER'S ASSOCIATION Film - 19 OCTOBER 2023 Click - 07 Re. 1

# CVPA குடும்ப விழா களை கட்டியது

## மகிழ்ச்சியில் CVPA உறுப்பினர்களின் குடும்பங்கள்

சங்க உறுப்பினர்களுக்கு வணக்கம்!

நமது சங்கத்தின் சார்பில் நாம் நடத்திய குடும்ப விழாவில் நமது சங்க உறுப்பினர்கள் அனைவரும் குடும்பத்தினருடன் மகிழ்ச்சியுடன் கலந்து கொண்டதை பார்த்த போது, நாங்கள் அனைவரும் மனநிறைவடைந்தோம். மிக முக்கியமான விளம்பரதாரர்கள் இந்த குடும்ப விழாவில் கலந்து கொள்ள போதிய ஆர்வம் காட்டாதது சற்று வருத்தமாகவே இருந்தது. இருந்தாலும் மிக நல்ல உள்ளத்தோடு உதவிய ஏனைய விளம்பரதாரர்களுக்கு நமது சங்கம் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். குறிப்பாக 10 மற்றும் பிளஸ் 2 தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற நமது சங்க உறுப்பினர்களின் பிள்ளைகளுக்கு சைக்கிள் வழங்கிய திரு . பிராங்கிளின் அவர்களுக்கும்,திரு. சங்கர் அவர்களுக்கும், மேலும் நமது பிள்ளைகளுக்கு கல்வி ஊக்கத்தொகை வழங்கிய அனைத்து நல் உள்ளங்களுக்கும் நமது சங்கம் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

குடும்ப விழாவை குத்து விளக்கு ஏற்றி துவக்கி வைத்த சின்னத்திரை புகழ் சௌந்தர்யா பாலு அவர்களுக்கும், நமது சங்க உறுப்பினர்களின் பிள்ளைகளுக்கு கல்வி ஊக்கத்தொகை வழங்கி நமது மாணவர்களை சிறப்பித்த சிறப்பு அழைப்பாளர் திரு. நல்லி குப்புசாமி அவர்களுக்கும், நமது சங்கத்தின் முன்னாள் நிர்வாகிகளுக்கும், நமது சங்கத்தின் அழைப்பை ஏற்று முதல் முறையாக கலந்து கொண்டு மருத்துவ முகாம் அமைத்து கொடுத்த அப்போலோ மருத்துவமனை நிறுவனத்திற்கும் இதை உடனிருந்து ஏற்பாடு செய்த சைதை பகுதியை சேர்ந்த நமது சங்க உறுப்பினர் திரு. சம்பத் அவர்களுக்கும் நமது நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். அப்போலோ மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக் கொள்ள விரும்பும் நமது சங்க உறுப்பினர்களுக்கு மருத்துவ கட்டணத்தில் 20 முதல் 30 வரை சிறப்பு தள்ளுபடியை வெகு விரைவில் அறிவிக்க உள்ளது, நமது சங்கத்துடன் அப்போலோ மருத்துவமனை ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. இனி வருங்காலத்தில் இதை நமது சங்க உறுப்பினர்கள் சரியாக பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். இது குறித்து விபரம் அறிய விரும்புகிறவர்கள் சங்க அலுவலகத்தை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

10 மற்றும் பிளஸ் 2 தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற நமது சங்க உறுப்பினர்களின் பிள்ளைகளை நாம் ஒவ்வொரு ஆண்டும் ஊக்குவித்து வருகிறோம். அந்த வகையில் இந்த வருடம் 57 மாணவ மாணவியரை நமது குடும்ப விழாவில் அழைத்து வந்து அவர்களுக்கு நமது சிறப்பு அழைப்பாளர் திரு. நல்லி குப்புசாமி அவர்களின் திருக்கரங்களால் கல்வி ஊக்கத் தொகையுடன் நினைவு பரிசு வழங்கி கௌரவ படுத்தினோம். இதை சங்க உறுப்பினர்களின் குடும்பங்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாடியது. கல்வி ஊக்கத்தொகை பெற்ற அனைவருக்கும் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம். இனி வரும் காலங்களில் அதிக மதிப்பெண் பெற்றவர்களின் எண்ணிக்கை கூடுதலாக வர வேண்டும் என்பதே நமது சங்கத்தின் நோக்கமாகும். குடும்ப விழாவில் நமது சங்கம் சார்பாக நடைபெற்ற ஓவியப் போட்டியில் நிறையபேர் கலந்து கொண்டார்கள். அந்த குழந்தைகளுக்கும் நமது சங்கம் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

லேடீஸ் முதல் குட்டீஸ் வரை கலை நிகழ்ச்சியில், மகிழ்ச்சியுடன் கலந்து கொண்டார்கள். நமது சங்கத்தின் வில்லிவாக்கம் பகுதி செயலாளர் ராஜன் அவர்களின் கேட்டரிங் சர்வீஸ் அனைவரும் பாராட்டி மகிழ்ந்தனர். குடும்ப விழாவில் அறுசுவை உணவு வழங்கிய திரு.ராஜன் அவர்களை பாராட்டுகிறோம். நமது குடும்ப விழா ஏற்பாடுகள் சிறப்பாக அமைய இணைந்து ஒத்துழைத்த சங்க நிர்வாகிகளுக்கும், செயற்குழு உறுப்பினர்களுக்கும், விளம்பரதாரர்களுக்கும் கோடான கோடி நன்றியை காணிக்கையாக்குகிறோம்.

இப்படிக்கு

CVPA செயலாளர் DM.**பிரேம்குமார்**








CVPA


CVPA


CVPA


CVPA









SUGAR CANDY






































CVPA

CVPA

CVPA








CVPA
Regd. No.













# CHENNAI VIDEO PHOTOGRAPHER'S ASSOCIATION
## சென்னை வீடியோ - புகைப்பட கலைஞர்கள் சங்கம்

Regd No. : 446/96

எண்.48, பூரா சாஹிப் தெரு, மவுண்ட் ரோடு, சென்னை-600002.
E-mail : cvpa9602@gmail.com Website : www.cvpa.in
✆ : 2860 7821,Cell : 7824034734

| தலைவர் | செயலாளர் | பொருளாளர் | P.R.O |
|---|---|---|---|
| S.செல் செல்வம் | D.M. பிரேம்குமார் | K. ஜெயபால் | N. ரவிக்குமார் |
| 9941867744 | 9884002779 | 9381090329 | 9841272071 |


Date : 20/04/2023

### அறிவிப்பு

**அன்பான CVPA உறுப்பினர்களே, உங்கள் அனைவருக்கும் ஒரு முக்கிய அறிவிப்பு!**

தமிழ்நாடு வீடியோ போட்டோகிராபர்ஸ் அசோசியேஷன் சார்பாக மண்டலம்-6 மற்றும் மண்டலம்-8ல் மண்டல கூட்டம் நடைபெறுவதாக நமது CVPA விற்கு இதுவரை எந்த ஒரு கடித போக்குவரத்தும் நடைபெறவில்லை. மேலும் இந்த கூட்டத்தில் கலந்து கொள்ளவோ கருத்துகளை பரிமாறிக் கொள்ளவோ CVPA சார்பாக யாருக்கும் நாம் அனுமதி வழங்கவில்லை. மாநில சங்கத்தின் மீது நீதிமன்றத்தில் உள்ள வழக்கு முடிவுக்கு வரும் வரை , பெரும்பான்மையான மாவட்ட சங்கங்கள் ஆதரிக்கும் பக்கமே CVPA வின் நட்புறவு தொடர்ந்து நீடிக்கும். மாநிலச் சங்க சட்ட விதிகளுக்கு உட்பட்டு பெரும்பான்மை அடிப்படையில் கூட்டப்படும் கூட்டங்களில் மட்டுமே C V P A கலந்து கொள்ளும். ஒரு மாவட்ட சங்கத்திற்கு எதிராகவோ அல்லது மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்ட சங்கங்களுக்கு எதிராகவோ நடைபெறும் கூட்டங்களில் CVPA நிச்சயம் கலந்து கொள்ளாது. மாவட்ட சங்கத்தின் சார்பாக கலந்து கொள்ள யாருக்கும் அனுமதியும் வழங்காது என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறோம். இதையும் மீறி, ஏனைய நட்பு மாவட்டங்களுக்கு எதிராக நடைபெறும் கூட்டங்களில் எவரேனும் CVPA சார்பாக கலந்து கொண்டால் சங்க சட்ட விதிகளுக்கு உட்பட்டு அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். நமது சங்க உறுப்பினர்களிடையே தேவையற்ற குழப்பத்தையும், பதட்டத்தையும் ஏற்படுத்தும் வகையில் செயல்படாமல் இருந்து ஒன்றுபட்ட CVPA ஆக இருப்பதே நமது நோக்கம். பிரிவினைவாத சக்திகளுக்கு இங்கு இடம் இல்லை. இதற்கு துணைச் செல்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது சங்க சட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை உறுதியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

இப்படிக்கு

தலைவர் செயலாளர்

S. செல் செல்வம் D.M. பிரேம்குமார்

CVPA உறுப்பினர்களே!

நமது சங்கத்தின் சார்பில் 20.4.2023 தேதியன்று வெளியிடப்பட்ட முன் அறிவிப்பின்படி மாநில சங்கம் குறித்து நாம் எடுத்த நமது நிலைப்பாடு அப்படியே தொடர்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். இதில் யாரும் தேவையின்றி குழப்பம் ஏற்படுத்த முயற்சி செய்ய வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறது. சங்க சட்ட திட்டங்களை மதித்து செயல்படுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

- CVPA





நமது சங்க அலுவலகத்தில் ஆயுத பூஜை சிறப்பாக கொண்டாடப்பட்டது. நமது சங்க தலைவர் செல்.செல்வம் அவர்கள் பூஜையை தொடங்கி வைத்தார். நமது சங்க நிர்வாகிகளும், செயற்குழு உறுப்பினர்களும் பூஜையில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



மத்திய சென்னை பட்டாளம் பகுதியைச் சேர்ந்த CVPA உறுப்பினர் ரவிச்சந்திரன் அவர்களின் மகள் திலகவதி (எ) அனு - தமிழன் இவர்களின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் நமது சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள்.

| 12th Std. Name List 2022-2023 | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| Sl. No | Student Name | Parent Name | Id No | Contact No. | Area | Parent Name | Marks |
| 1 | Nithish Sundaram S M | Mani Sundaram | 2089 | 99417 77000 | Nungambakkam | Rajan Video's | 579 |
| 3 | Balaji. J | G.E. Jayashankar | 91 | 98406 21105 | Choolai | Sri Gokul Stills & Video | 540 |
| 2 | Ragul RS | G. Raghunath Babu | 2168 | 94441 13871 | Ayanavaram | RS Gift Studio | 540 |
| 4 | Sri Vijey Lakshmi G | S. Ghajapathy | 1186 | 94441 27772 | Mugappair West | G.G. Videos | 536 |
| 5 | Deepak Saravanan K | M. Kotteswaran | 5151 | 99404 47995 | Adambakkam | Chennai Fotos | 535 |
| 6 | Sri Madhumitha | K. Ganesh | 2931 | 98402 33712 | Triplicane | Ganesh Video & Still's | 530 |
| 7 | Sri Mano Ranjan | K. Ganesh | 2931 | 98402 33712 | Triplicane | Ganesh Video & Still's | 530 |
| 8 | Pooja Shree. K.S | V. Kumar | 1430 | 98401 55933 | Pattalam | Chinni Videos | 527 |
| 9 | Mohammed Parvez Khan F | A. Feroz Khan | 1511 | 98415 01115 | Tondiarpet | F.G. Royal Video's | 525 |
| 10 | Kaviya T V | V. Vijaya Raja | 2133 | 93827 61974 | Madipakkam | Sri Kumaran Digital Studio | 518 |
| 11 | Miruthula S B | P. Sivalingam | 998 | 94443 25654 | Old Washermenpet | Siva Video | 511 |
| 12 | Varsha S.P. | S. Padmavathy | 6163 | 91763 18404 | New Perungalathur | Sai Digital Photo Studio | 507 |
| 13 | Shalini D | V. Dhayalan | 5200 | 99418 17725 / 95660 88322 | New Washermenpet | Friend's Video | 501 |
| 14 | Kaviya Sree. V | M. Velmurugan | 2118 | 98841 84548 | Pattalam | Pavithra stills & Video | 500 |
| 15 | Priyadarshini. R | S. Ramesh | 1656 | 98413 14582 | Vadapalani | R. Studio | 491 |
| 16 | Harine A | S. Anand | 968 | 89392 45066 | New Washermenpet | Ayya Studio | 488 |
| 17 | P.S. Yogalakshmi | T. Senthilkumar | 3553 | 8144655506 | Teynampet | Sri Sakthi Graphics | 460 |
| 18 | Taruniya JVS | J. Veerapandian | 2714 | 97911 54623 | West Saidapet | J.V. Stills & Video's | 424 |
| 19 | Vijaya Jeevaga RV | P. Ramesh | 4169 | 98414 64650 | Purasaiwalkam | Jeevaga Photo's | 415 |
| 20 | Mohammed Suffiyan G | A. Gouse Basha | 713 | 98401 21525 | Ennore | F.G. Digital Studio | 383 |
| 21 | Madhan S | M. Saravanan | 1492 | 89460 11513 | Alwarthirunagar | Nivetha Sri Videos | 362 |
| 22 | Sumuthra M | J. Muruganandham | 5879 | 99413 11006 / 99418 46461 | Manali | Keerthana Studio | 349 |
| 23 | Abinaya Shree K | T. Karthik | 5589 | 93457 49744 | Pattalam | Karthik Stills | 343 |
| 24 | Sudharshun S K | S. Karunagaran | 1518 | 98400 29676 | Okkiym Thuraipakkam | Periyava Studio | 343 |
| 25 | **Murali Vijay S.R** | **S.Rajendran** | **5250** | **8531013989** | **Madipakkam** | | **504** |
| 26 | **Thamari Kannan.B** | **K,Baskaran** | **3017** | **9841415111** | **WestMambalam** | | **389** |
| 27 | **Harini.M** | **R. MANOKARAN** | **2170** | **9444175894** | **Nungambakkam** | | **522** |

| 10th Std. Name List 2022-2023 | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| Sl. No. | ID No. | Student Name | Parent Name | phone no | Area | Studio Name | Marks |
| 1 | 2011 | Harshita J | D. Jayakumar | 98842 40196 | Mylapore | Thilak Video's | 488 |
| 2 | 4322 | K. Amirtha | N. Kumaravel | 93805 96349 | Thiruverkadu | Parvathi Studio | 568 |
| 3 | 2089 | Darshitha SM | Mani Sundaram | 99417 77000 | Nungambakkam | Rajan Video's | 474 |
| 4 | 5253 | B Rakshanaa | G. Balakrishnan | 99405 41199 | Palavanthangal | Bala Stills | 472 |
| 5 | 5969 | S. Praveena | U. Siva Ganapathy | 98652 94115 / 70106 63748 | Teynampet | Sree Sai Ganapathy Videos | 463 |
| 6 | 1154 | Vikneshwaran N | G. Nagarajan | 98402 05675 / 88259 90757 | Nanganallur | Ambal Video | 454 |
| 7 | 2319 | Tejash R S | R. Selva Sekaran | 98404 06626 / 91713 50189 | Ashok Nagar | R.S. Video's | 441 |
| 8 | 2618 | Keerthi Shree E | K. Elangovan | 97890 94373 | T. Nagar | K.K. Digital's | 437 |
| 9 | 5287 | Sarah Jane. V | A. Vijay | 98415 62270 | Thiruvottiyur | V.M. Sarah Studio | 437 |
| 10 | 3487 | Moniesh S | S. Babu | 98845 51689 / 90924 53444 | Ambattur | Fine Click Photography | 435 |
| 11 | 3507 | Divya S | N. Shankar | 98849 37578 | Velachery | Star Digital Photo Studio | 406 |
| 12 | 1489 | Lakshmi V | V. Venkat Raghava | 87549 81323 | Nanganallur | Thirumalai Thirupathy Video | 402 |
| 13 | 2218 | Varshini G | K. Ganesan | 97105 52233 / 98425 52233 | Otteri | Studio V2H | 392 |
| 14 | 4820 | Jayadharshini V | E. Vijayakumar | 98414 17716 | Chromepet | Vijay Digital Video & Studio | 391 |
| 15 | 1487 | Preetha R | S. Rajesh | 98412 06227 | Nammalwarpet | Raj Video & Stills | 391 |
| 16 | 2472 | V N Tushar | D. Narayana Moorthy | 72997 36100 | Anna Salai | Jothy Color Lab | 380 |
| 17 | 3804 | Bakkiyasri A | K. Anbarasan | 98410 29302 | Velachery | Anbu Studio & Video | 376 |
| 18 | 2616/22 | Keerthana K | M. Karthik Saravanan | 900323 33150 | Tondiarpet | S.K. Studio & Video | 375 |
| 19 | 4169 | Chevvan Vennu RV | P. Ramesh | 98414 64650 | Purasaiwalkam | Jeevaga Photo's | 370 |
| 20 | 4283 | A J Sai Shruthika | A. Arumugam | 98849 59334 | Nanganallur | Sai Digital Studio | 366 |
| 21 | 5723 | Midhuna P L | S. Palanivaasan | 98412 65478 / 90801 22965 | Madhavaram | Rafeal Stills | 356 |
| 22 | 2142 | Jotheeshwar S | K. Sethuraman | 94441 88544 | Nungambakkam | SJ Digital Photography | 354 |
| 23 | 1786 | Jeevan T N | G. Thiyagarajan | 98843 36004 | Tondiarpet | J N Studio | 325 |
| 24 | 3739 | Deepitha S | R. Sathish | 94447 48606 / 81229 93098 | Choolai | Sathish Digital Studio | 314 |
| 25 | 2702 | Pugazhendhi S | D. Senthil Kumar | 91501 41316 / 90944 59500 | Choolai | P.S. Studio | 312 |
| 26 | 3262 | Mokishan M | K.M. Muraleethara | 98414 13954 | Madipakkam | Saranya Digital Video & Studio | 258 |
| 27 | 1009 | Saran S | J. Suresh Kumar | 94441 47988 | Pattalam | Ashvini Video Vision | 253 |
| 28 | 5164 | Tamil Arasu. A | A. Arumugam | 99624 02284 | Moovarasanpet | Saravanan Digital | 249 |
| 29 | 4743 | Hariharan D | C. Devaraj | 98416 05242 | West Saidapet | Freelancer | 233 |
| 30 | 6383 | MADHUMITHA.H | S.HARI DOSS | 9710401370 | Annanagar | HARI PHOTOGRAPHY | 342 |

# PORTRAIT VS ACTIVE D&LIGHTING

புலிவலம் ரவி (திருச்சி) 9442777240

கேமராவை பற்றி நாம் கற்றுக்கொள்ளும்போது கொடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு மெனு செட்டிங்ஸின் ஒவ்வொரு வகைகளின் தொழில்நுட்ப தகவல்களின் அடிப்படையை முதலில் தெரிந்து கொண்டால் அல்லது நன்கு புரிந்து கொண்டால் அவைகள் எப்போதும் நமக்கு நினைவில் நிற்கும். அவைகளை நாம் எப்போது, எங்கு பயன்படுத்தவேண்டிய சூழ்நிலைகளில் நமக்கு படங்களில் தேவையான நல்ல மாற்றத்தை தரும்.


அதுபோல ஒரு தொழில்நுட்பம்தான் நிக்கான் கேமராவின் மெனு செட்டிங்ஸில், சூட்டிங்ஸ் மெனுவிலுள்ள ஆக்டிவ் டி லைட்டிங் (Active D&Lighting) ஆப்சனை பற்றி இக்கட்டுரையில் பார்ப்போம்.

2008 ஆம் ஆண்டு ஆரம்ப நிலையில் வெளிவந்த நிக்கான் D90 DSLR கேமராவில் நாம் ஆக்டிவ் டி லைட்டிங் ஆப்சனை ஆன் செய்தாலே, சூட்டிங்ஸ் மெனுவிலுள்ள செட் பிக்சர் கண்ட்ரோல் வகையில் உட்பிரிவான ப்ரைட்னஸ் மற்றும் காண்ட்ராஸ்ட் (Brightness and Contrast) ஆப்சன் தானாகவே ஆப் ஆகிவிடும். இதிலிருந்து அடிப்படையாக என்ன தெரிகிறது என்றால் ஆக்டிவ் டி லைட்டிங் ஆப்சனுக்கும், ப்ரைட்னஸ் மற்றும் காண்ட்ராஸ்ட் ஆப்சனுக்கும் உள்ள தொடர்பை நம்மால் நன்கு புரிந்து கொள்ள முடியும்.

சரி தகவலுக்கு வருவோம். நிக்கானின் சூட்டிங் மெனு என்பது நாம் படமெடுப்பதற்கு முன்பாக அதிலுள்ள ஒவ்வொரு வகையிலும் நமக்கு தேவையானவற்றை அமைத்துகொண்டு படமெடுக்கவேண்டும். அதில் ஒரு வகைதான் ஆக்டிவ் டி லைட்டிங் என்பது.

உதாரணமாக ஒரு கடுமையான நன்பகல் சூரிய ஒளியில் படமெடுக்கும்போது, படத்தில் கடுமையான நிழற்பகுதிகளும் (Shadows) நல்ல பிரகாசமான வெளிச்சமும் (High Highlights) படத்தில் பதிவாகும். அதுபோன்ற சமயங்களில் ப்ரேமிலுள்ள சப்ஜெக்டின் நிழற்பகுதிகள் மற்றும் ஹைலைட்ஸ் ஏரியாக்களில் விவரங்கள் (Details) மறைந்திருக்கும்.

இதுபோன்ற சமயங்களில் நாம் ஆக்டிவ் டி லைட்டிங் ஆப்சனை ஆன் செய்து வைத்திருந்தால் சப்ஜெக்டின் நிழற்பகுதிகளில் மறைந்திருக்கும் விவரங்களை வெளிக்கொண்டு வரும் அல்லது செட்பிக்சர்கண்ட்ரோலின்உட்பிரிவிலிருக்கும் ப்ரைட்னஸின் அளவை அதிகப்படுத்தியும், காண்ட்ராஸ்ட்-ன் அளவை அதிகப்படுத்தியும் நிழற்பகுதிகள் மற்றும் ஹைலைட்ஸ் ஏரியாக்களில் மறைந்திருக்கும் விவரங்களை வெளிக்கொண்டு வரலாம். (படம் காண்க)





சரி இப்போது தலைப்பை நன்கு படித்துவிட்டு இப்போது தொடருங்கள். ஆக்டிவ் டி லைட்டிங் ஆப்சனை எப்போதும் ஆன் செய்து வைத்திருக்கக்கூடாது. நாம் மேலே பார்த்தவாறு அதனுடைய தேவை எப்போது வேண்டுமோ, அப்போதுதான் ஆன் செய்யவேண்டும்.

முக்கியமாக வீடியோ லைட்ஸ், ப்ளாஸ் லைட்ஸ், ஸ்ட்ரோப் லைட்ஸ், டுநுனு லைட்ஸ் போன்றவைகளை பயன்படுத்தி போர்ட்ரைட் படங்களை (லைட்டிங்ஸ் ஸாட்ஸ்) எடுக்கும்போது ஆக்டிவ் டி லைட்டிங் ஆப்சனை மறக்காமல் ஆப் செய்து கொள்ளுங்கள்.

ஏனெனில் நாம போர்ட்ரைட் படங்களில்; முகங்களில் லைட்டிங் ப்ளாட் ஆக இல்லாதவாறு லைட்டிங் வேறுபாடுகளை (Lighting Difference) (3D Effect) கொண்டு வருவோம். அதாவது போர்ட்ரைட் படங்களில் முகத்தில் ஸாப்ட்-ஆன சேடோவ்ஸ் மற்றும் தேவையான ஹைலைட்ஸை கொண்டு வந்து முக்கியமாக நல்ல லைட்டிங் சென்ஸ் இருக்குமாறு படப்பதிவு செய்வோம்.

அதுபோன்ற சமயங்களில் ஆக்டிவ் டி லைட்டிங் ஆப்சனை ஆன் செய்து படப்பதிவு செய்தால் முகத்தில் ஸாப்ட்-ஆன சேடோவ்ஸ் மற்றும் தேவையான ஹைலைட்ஸிலுள்ள



விவரங்களை வெளிக்கொண்டு வரும். நாம் நினைத்தவாறு லைட்டிங் எபக்ட் இல்லாமல் படம் சொதப்பி விடும்.

எனவே நண்பர்களே, நாம் கேமராவிலுள்ள ஒவ்வொரு ஆப்சனையும் எங்கு, எப்படி பயன்படுத்தவேண்டும் என்பதை நன்கு புரிந்துகொண்டு படமெடுப்போம்.




நிக்கானில் ஆக்டிவ் டி லைட்டிங் என்ற பெயரில் வரும் இந்த வசதி மற்ற கேமராக்களில் வேறு வேறு பெயர்களில் வரும். ஆனால் அதன் செயல்பாடுகள் ஒன்றுதான் உதாரணமாக கேனானில் டிஜிட்டல் ஆப்டிமைசர்.

நன்றி நண்பர்களே... அடுத்து வேறு ஒரு புதிய போட்டோகிராபி தகவலுடன் உங்களை சந்திக்கிறேன்... அட்மின் தமிழ்நாடு கேமரா டெக்னிக்கல் க்ளப்

**CVPA NEWS** (Tamil & English ) Monthly Newspaper,
**RNI No. TNBIL / 2005 / 15261 (R.Dis no.1834/04)**
Published by **B.SRIDAR,** on behalf of
**Chennai Video & Photographers' Association,**
at 51/24, Bangaru Street, Ellis Road, Chennai-2. Ph: 2860 7821
Email : cvpanews2005@gmail.com, Website : www.cvpa.in
Printed by **M.NAVANEETHAN,** at **Nava Jothi Achagam,**
No.8. Muktharunnissa Begum St, Ellis road, Chennai-2.
Editor : **B.SRIDAR,** Mobile: 8015170351

**If undelivered please return to**
**Chennai Video & Photographers' Association,**
**at 51/24, Bangaru Street, Ellis Road, Chennai-2. Ph: 28607821**

Postal Registration no TN/ARD/11/2021-2023 WPP License No: TN/PMG/CCR/WPP 557/2021-2023
Posted at Egmore RMS/I (Partika Channel) Posted on 28.10.2023

**To**